பெண் எழுத்தாளர் அறிமுகம் 33



# கவிதை என்பது படிப்பவரை காதல் செய்வதாக அமைய வேண்டும்

## அமெரிக்காவில் தமிழ் வளர்க்கும் நெல்லை (அன்புடன்) ஆனந்தி

மஜினா உமறு லெவ்வை ...
மாவடிப்பள்ளி

இந்தியாவில் தமிழ்நாட்டில் திருநெல்வேலியில் பிறந்து தற்போது மிச்சிகன், வட அமெரிக்காவில் 24 வருடங்களாக வசித்து வருபவர் "அன்புடன்" ஆனந்தி. இவர் கவிதாயினி, எழுத்தாளர் , தமிழ் ஆசிரியர், நிகழ்ச்சி தொகுப்பாளர், தயாரிப்பாளர், கவிஞர், கட்டுரையாளர், பட்டிமன்றப் பேச்சாளர் எனத் தமிழ் மொழி மேல் கொண்ட காதலால் இன்றும் தமிழ் சார்ந்து இயங்கிக் கொண்டிருக்கிறார்.

அமெரிக்காவில் "எனர்ஜி சயின்சஸ்" என்ற ஒரு அலுவலகத்தில் அலுவலக மேலாளராகப் பணியாற்றி வரும் இவருக்கு, இரு பெண் பிள்ளைகள் உள்ளனர். இவரது கணவர் பிஸியோ தெரபிஸ்டாக அமெரிக்காவில் பணியாற்றி வருகிறார். இவர் கடந்த 15 வருடங்களாக கவிதைகள் , கட்டுரைகள் தொடர்ந்து எழுதி வருகிறார்.

இவர் ஆசிரியப் பயிற்சி படித்துக் கொண்டிருக்கும் பொழுது" நவீன திருவிளையாடல் " என்ற ஒரு நாடகத்திற்கு வசனம் எழுதி அதில் பார்வதியாக நடித்துள்ளார்.

அமெரிக்காவுக்கு வந்த பின் சுமார் பன்னிரண்டு ஆண்டுகளாக முகநூலில் ப்ளாகில் தனது கவிதைகளை எழுதி வந்ததோடு அமெரிக்காவில் இருக்கக்கூடிய தென்றல், கதம்பம் போன்ற இதழ்களில் தனது கட்டுரைகள், கவிதைகள் வெளிவந்துள்ளதாக குறிப்பிட்டார்.

இவர் பல கவியரங்குகளிலும், கருத்தரங்குகளிலும் உலக சாதனை நிகழ்வுகளிலும் பங்கேற்று சான்றிதழ்கள் பெற்றதோடு சங்கப்புலவர் விருது, பாரதியார் விருது, பாவலர் விருது, தங்க மங்கை விருது, தமிழ் தொண்டர் விருது, சிங்கப்பெண் 2022 விருது, ஈரோடு தமிழன்பன் 80 விருது, சமுதாயச் சிற்பி 2022 உள்ளிட்ட சில விருதுகளைப் பெற்றுள்ளதாக குறிப்பிட்டார்.

இவர் கடந்த 15 வருடங்களாகத் தொடர்ந்து எழுதி வருகிறார். இதுவரை ஐந்து நூல்களை வெளியிட்டுள்ளார்.

கொரோனா காலத்தில் தனது முதல் கவிதை நூலான 'என்னுயிர் நீயன்றோ' நூலை வெளியிட்டார். அதனைத் தொடர்ந்து 'ஆனந்த அந்தாதி' என்ற அந்தாதி வடிவத்தில் ஒரு கவிதை நூலையும் 'முக்கூடல் வெண்பா' என்ற ஒரு மரபுக் கவிதைத் தொகுப்பு நூலையும் (இரு நண்பர்களோடு இணைந்து) வெளியிட்டுள்ளார்.

அமெரிக்காவிலிருந்து வெளிவந்த முதல் தன்முனைக் கவிதைகள் நூலாக 'அவளின் நாட்குறிப்பேடு' என்ற கவிதை நூல் வெளிவந்தது. கடந்த மே 8ஆம் திகதி தாயகம் சென்று அங்கே 'மனம் ஒரு மாயக்காரன்' என்ற ஒரு கட்டுரைத் தொகுப்பு நூலை வெளியிட்டுள்ளார்.

கதம்பம், தென்றல், முத்துக்கமலம், வளரி, வல்லினச் சிறகுகள், இனிய உதயம், மக்கள் முரசு, தாரகை, நெல்லை டைம்ஸ், ஆனந்தச் சந்திரிகை, ஆக்கம், தமிழ்ப்பல்லவி, கொக்கரக்கோ, சித்திரகுப்தன் ஆகிய இதழ்களில் இவரது படைப்புகள் வெளிவருவதாக இவர் கூறினார்.

ஒரு கவிதை என்பது எவ்வாறு அமைய வேண்டும் என வினவப்பட்ட போது இவ்வாறு பதிலளித்தார்.

கவிதை என்பது படிப்பவரை காதல் செய்வதாக அமைய வேண்டும். உணர்வுகளைத் தூண்ட வேண்டும் அல்லது எண்ணத்தை எழுச்சியாக்க வேண்டும் அல்லது ஏற்றத்தைக் கொடுக்க வேண்டும்.

ஒற்றை வரியில் சொன்னாலும் சரி, ஓராயிரம் வரிகளில் சொன்னாலும் சரி. சொல்லக்கூடிய விஷயத்தை உள் வாங்கும் விதமாக வாசகருக்குப் புரியும் விதமாக எளிமையாகவும் இனிமையாகவும் நுட்பமாகவும் சொல்ல வேண்டும்.

கண்ணில் காணும் காட்சிகளை கதைகளாய் சொல்லாது, விதைகளாய் விதைக்காது, கவிதையாய்ப் புனைவது ஒரு வரம். அது ஒரு தவம். ஒரு கவிதையைப் படிக்கும் பொழுது அதை அப்படியே மறந்து விட்டு சென்றுவிடக்கூடாது. அந்த கவிதை வாசிப்பாளர் மனதில் ஓடிக்கொண்டே இருக்க வேண்டும். அவன் எண்ணத்தின் ஓரத்தில் எங்கேயோ அமர்ந்துகொண்டு அவனை ஏதோ செய்ய வேண்டும்.

ஒரு கவிதை வாசிப்பாளரைக் கவர்வது அந்தந்த வாசிப்பவரின் மனநிலையை பொறுத்தது. ஒரே கவிதை ஒருவருக்குப் பிடிக்கும், ஒருவருக்குப் பிடிக்காது. ஒரே கவிதையை ஒருவர் ஆகா என்று சிலாகிப்பதும் உண்டு, இன்னொருவர் ஐயோ இதென்ன கொடுமை என்று எண்ணுவதும் உண்டு. வாசிப்பவரின் மனோநிலையைப் பொறுத்தே கவிதை ஈர்க்கப்படுகிறது. சொல்ல வந்த விடயத்தை எளிமையாகப் புரிய வைத்துவிட்டால் எப்படி ஒரு திரைப்படப் பாடலைக் கேட்கும் பொழுது நம் வாழ்க்கையோடு பொருத்திப் பார்த்து கண்ணீர் விடுவதும் அழுவதும் சிரிப்பதும் உண்டோ, அது போல் கவிதை வரிகளைப் படிக்கும் பொழுது அதை தன்னோடு பொருத்திப் பார்ப்பது தான் பழக்கம்.

ஒரு வாசிப்பாளர் அவ்வாறு பொருத்திப் பார்க்கும் பொழுது அவன் மனதைத் தொடும் விதமாக வரிகள் அமைந்துவிட்டால் அந்த கவிதையால் அவர் ஈர்க்கப்படுவார். கவிதை வரிகள் அவன் வாழ்க்கையோடு தொடர்பு கொண்டு பயணிக்கும்.

இன்றும் கண்ணதாசனின் பல வரிகளை நாம் மனதில் நினைத்துக் கொண்டிருப்பது போல, வைரமுத்துவின் வரிகளை வாஞ்சையோடு அசை போட்டுக் கொண்டிருப்பது போல, நாம் எழுதிய வரிகள் ஒருவர் மனதைத் தொட்டு விட்டால் அது அவர்களை ஈர்த்து அவர்கள் மனதில் வாசம் செய்யும். இதற்கான சூத்திரமோ, இலக்கணமோ என்று எதுவுமில்லை. படைப்பாளனின் திறமையும் அதைப் படிப்போரின் உணர்வும் சார்ந்ததே என கவிதை பற்றி தனது கருத்துக்களை கூறினார்.

விளையாட்டாகச் சொல்வது "சண்டை என்று வந்தால் சட்டை கிழியத்தானே செய்யும் என்று". அதுபோல எந்த ஒரு துறையை எடுத்துக் கொண்டாலும் நம்மைப் போற்றும் நபர்களும் தூற்றும் நபர்களும் இருப்பார்கள். மேலே ஏறுவதைப் பார்த்து வியப்போரும் கீழே இழுத்து விட துடிப்போரும் இருப்பார்கள். அப்படி நானும் சில பல அனுபவங்கள் கடந்து வந்துள்ளேன்.

நல்ல அனுபவங்களை ஆனந்த அலைகளாக எடுத்துக்கொண்டேன். கசப்பான நிகழ்வுகளை அனுபவமாக எடுத்துக் கொண்டேன். என்னைப் பொறுத்த வரையில் நீ நீயாக இரு. யாராகவும் இருக்க முயலாதே.. என்பதை வாழ்க்கையில் கடைபிடிப்பவள். நமக்கு வருவதை ஒழுங்காகச் செய்தாலே நமக்குக் கிடைக்கக் கூடியவை தானே கிடைக்கும். இன்னொருவரைப்போல ஆக வேண்டும் என்ற துடிப்புடன் இயங்கும் பொழுது தான் ஒருவன் தன்னை இழக்கிறான். தனக்கான சுயத்தை மறக்கிறான்.

தான் மட்டும் உயர வேண்டும் என்று நினைக்காமல் கூட பயணிப்பவர்களையும் ஒன்றாக இணைத்து செல்லும் பொழுது அதில் கிடைக்கக் கூடிய ஆனந்தமே தனி. அப்படித் தொடர்ந்து செயல்படுவதை முக்கிய குறிக்கோளாகக் கொண்டிருப்பவள். "குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை" என்று என் தகப்பனார் அடிக்கடி சொல்வது போல எல்லாமே சுபமாக நலமாக நடந்துவிட்டால் வாழ்க்கையும் போரடித்துத் தானே போகும். அதனால் சில பல சீண்டல்களும் தடைக்கற்களும் அங்கங்கே வரத்தான் செய்யும். அதைக் கடந்து போவதும் ஒரு சுகமே. எதைப்பற்றியும் அதிகமாக யோசிக்காமல் அவ்வப்போது கடந்து போவதே என் வழக்கம். அதுவே நான் தொடர நினைக்கும் பழக்கம். "துன்பம் வரும்போது கொஞ்சம் சிரிங்க" என்று சொல்லி வைத்தார் வள்ளுவர். நன்மை வரும் பொழுது எப்படி மனமகிழ்வோடு குதூகலத்தோடு இருக்கிறோமோ, அதே போல துன்பம் வரும் பொழுதும் அதையும் ஏற்றுக் கொள்ளக் கூடிய மனப்பக்குவத்தைப் பெற்று விட்டால் பல இன்னல்களைத் தவிர்க்கலாம்.

இன்பமோ துன்பமோ சமமாகப் பார்க்க முயற்சி செய்கிறேன். புகழ்ச்சியும் இகழ்ச்சியும் சமமாக எடுத்துக் கொள்ள பயின்று கொண்டிருக்கிறேன். தடைக்கற்களை படிக்கற்களாகத் தாண்டி பயணித்துக் கொண்டிருக்கிறேன் என தான் சந்தித்த சவால்களையும் அதை தாண்டிய விதத்தினையும் பகிர்ந்து கொண்டார்.

கவிதை பயன் கருதி நான் எந்தக் கவிதையும் எழுதுவதில்லை. அதுபோல் எனது கவிதையை நீ படித்தே ஆக வேண்டுமென்று யாரையும் கொடுமை செய்வதுமில்லை.

கவிதை எழுதுவது என்பது நம் மனதை புத்துணர்வோடு வைத்திருக்கச் செய்கிறது. கவிதை எழுதுபவனும் ஒரு படைப்பாளியே! ஒரு படைப்பாளியாக நாம் இருக்கும் பொழுது நம்மை அறியாமல் நமக்குள் ஒரு சிலிர்ப்பு, மகிழ்ச்சி, ஆனந்தம் இருக்கத்தான் செய்கிறது.எதிரே நடக்கும் ஒரு சம்பவத்தைப் பார்க்கும் பொழுது நான்கு வரிகளில் அதைக் கவிதையாக வடிக்கும் பொழுது ஏதோ ஒன்றைப் பதிவு செய்து நிறைவு செய்ததாய் ஒரு எண்ணம்.

அதை யாரோ ஒருவர் புரிந்து கொண்டு சரியாகச் சொல்லியிருக்கிறீர்கள் என்று சொல்லும்பொழுதும், மனதைத் தொடும் விதமாக இருக்கிறது என்று ரசிக்கும் போதும் நமக்குள் ஏதோ சாதித்து விட்ட உள்ளுணர்வு.எந்தப் பயனையும் எதிர்பார்க்காது செய்யக்கூடிய செயலுக்கு தான் நன்மை உண்டு. அதுபோல் எந்தப் பயனையும் எதிர்பார்த்து நான் கவிதை எழுதுவதும் இல்லை. அப்படி எழுதுவது கவிதையாகவும் இருப்பதில்லை.




மனதில் பட்டதை மகிழ்வோடு வரிகளாகப் படைத்து வருகிறேன். ஒரு சூரிய உதயம், சூரிய அஸ்தமனம், மழை நேரத்து மாலை, பனித்துளி படர்ந்த மலர்கள், துள்ளிக்குதிக்கும் மீன்கள், தூரப் பறந்து போகும் பறவைகள், ஓடிப்பிடித்து விளையாடும் சிறுவர்கள், ஓரமாக அமர்ந்து கதைக்கும் பெரியவர்கள், காதலோடு கடக்கும் இணையர்கள், காத்திருக்கும் தெருவோரக் கடைக்காரர்கள், அசை போட்டுக் கொண்டிருக்கும் மாக்கள், அழகாக வருடிப் போகும் தென்றல், இப்படி கண்ணில் பட்டதையெல்லாம் கருத்தில் நினைத்ததையெல்லாம் கவிதையாக படைப்பதில் இருக்கும் சுகமே தனி. ஒரு கவிஞனாக படைப்பாளியாக இருப்பதில் நானும் பெருமை கொள்கிறேன் என மனம் திறந்து தனது இலக்கியப்பயணத்தின் அனுபவங்களை பகிர்ந்து கொண்டார்.